# கணக்கீடு

## உரிமை மாற்றல் கூற்று



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

**தேர்ச்சி 12.0**

**தேர்ச்சி மட்டம் 12.4**

## உரிமை மாற்றல் கூற்று

வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் கூறப்பட்ட மூலதனம், ஒதுக்க நிதி ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களைக் காட்டும் கூற்று இதுவாகும். பங்குதாரரின் உரிமையைப் பின்வரும் விடயங்கள் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

1. பங்கு வழங்கல் / உரிமைப் பங்கு வழங்கல் - உரிமையாண்மையில் அதிகரிப்பு ஏற்படும்.
2. ஒதுக்கங்களை மூலதனமாக்கல் - உரிமையாண்மையில் மாற்றம் ஏற்படாது.
3. இலாபத்தின் ஒரு பகுதியை பொது ஒதுக்கத்திற்கு மாற்றுதல் - உரிமையாண்மையில் மாற்றம் ஏற்படாது.
4. இடைக்கால பங்குலாபம் வழங்கல் - உரிமையாண்மையில் குறைவு ஏற்படும்
5. நடைமுறை அல்லாச் சொத்துக்களை மிள் மதிப்பிடுதல் மிகை - உரிமையாண்மையில் அதிகரிப்பு ஏற்படும்.

**உரிமைமாற்றல் கூற்றின் மாதிரி வடிவம்**

| | சாதாரணப்பங்கு மூலதனம் ரூபா | மீள்மதிப்பீட்டு மிகை ரூபா | பொது ஒதுக்கம் ரூபா | பகிரப்படாத இலாபம் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|
| ஆரம்ப மீதிகள் | XXX | XXX | XXX | XXX | XXX |
| பங்கு வழங்கல் | XXX | | | | XXX |
| ஒதுக்கங்களை மூலதனமாக்கல் | XXX | | (XXX) | | |
| ஆண்டுக்கான மொத்த முற்றடக்கல் இலாபம் | | XXX | | XXX | XXX |
| பொது ஒதுக்கம் | | | | (XXX) | |
| இடைக்கால பங்குலாபம் | | | | | (XXX) |
| இறுதி மீதிகள் | XXX | XXX | XXX | XXX | XXX |

## பகிர்ந்தளிப்புக்கள்

கம்பனியானது வருமான வரிக்கு பின்னரான இலாபத்தினை அமைப்பு அகவிதிக்கு அமை-வாக இயக்குனர்களினால் பின்வருமாறு பகிர்ந்தளிப்பு செய்ய முடியும்.

1. பொது ஒதுக்கத்திற்கு மாற்றுதல்
2. இடைக்கால பங்குலாபத்திற்கு மாற்றுதல்

தொகுப்பு : திரு.ம.அசோக்குமார் - ஆசிரியர் - கணக்கீடு (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.சி.கிரிசாந்தன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

3. ஒதுக்கங்களை மூலதனமாக்கல்
4. ஒரு பகுதியை பகிரப்படாது நிறுத்தி வைத்தல்.

## பொது ஒதுக்கம்

கம்பனியின் எதிர்கால நிதித் தேவையை ஈடு செய்வதற்காக கம்பனியினால் உழைக்கப்படும் இலாபத்தின் ஒரு பகுதியை பொது ஒதுக்கத்திற்கு மாற்றப்படுகிறது. இது உள்ளக சேமிப்பாகும். இந்நிதி பங்குதாரர்களுக்கு பகிர்ந்தளிக்க முடியும்.

**இரட்டைப்பதிவு:**

இலாபநட்ட பகிர் கணக்கு வரவு (உரிமைமாற்ற கூற்றில் பகிரப்படாத இலாபத்தில் கழிக்கப்படும்.)

பொது ஒதுக்கக் கணக்கு செலவு

## இடைக்காலப் பங்குலாபம்

கம்பனி காலாண்டுக்கொருமுறை அல்லது அரையாண்டுக்கொருமுறை உழைக்கப்பட்ட வருமான வரிக்கு பின்னரான இலாபத்திலிருந்து வழங்கும் இலாபமே இடைக்கால இலாபம் ஆகும். கம்பனி திருப்திகரமாக இலாபம் உழைத்துள்ளது என இயக்குனர் சபை கருதும் போது அவர்களின் தீர்மானத்திற்கமைய இடைக்காலப் பங்குலாபம் வழங்கப்படும்.

**இரட்டைப்பதிவு:**

இலாபநட்டக் கணக்கு வரவு (உரிமை மாற்றல் கூற்றில் பகிரப்படாத இலாபத்திலிருந்து கழிக்கப்படும்)

காசுக்கணக்கு செலவு

## இறுதிப்பங்குலாபம்

இலங்கை கணக்கீட்டு நியமம் 10 இற்கமைய ஐந்தொகை திகதிக்குப் பின்னர் சாதாரண பங்குகளுக்கு இறுதிப் பங்குலாபம் பிரேரிக்கப்படும் போது இதனைச் சீர்படுத்தாத நிகழ்வாக கருதப்படும். எனவே சாதாரண பங்குகளுக்கு பிரேரிக்கப்பட்ட இறுதிப்பங்குலாபம் உரிமை மாற்றல் கூற்றில் பதிவு

**உதாரணம்**

வரையறுத்த பான்சி கம்பனியில் புத்தகங்களிலிருந்து 01.01.2016 இல் உள்ள மீதிகள் வருமாறு:

| | |
|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் (ஒவ்வொன்றும் ரூ. 30 படி வழங்கப்பட்டது) | 300 000 |
| மறுபடி விலை மதித்தல் ஒதுக்கம் | 90 000 |


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பகிரப்படாத இலாபம் 75 000

பொது ஒதுக்கம் 50 000

வரையறுத்த பான்சி கம்பனியில் புத்தகங்களிலிருந்து 01.01.2016 இல் உள்ள மீதிகள் வருமாறு:

சாதாரண பங்கு மூலதனம் (ஒவ்வொன்றும் ரூ. 30 படி வழங்கப்பட்டது) 300 000

மறுபடி விலை மதித்தல் ஒதுக்கம் 90 000

பகிரப்படாத இலாபம் 75 000

பொது ஒதுக்கம் 50 000

2017.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வரிக்குப்பின் இலாபம் ரூ. 180 000

மேலதிக தகவல்கள்

1. கம்பனி 31.03.2016 இல் மோட்டார் வாகனம் ரூ.10 000 இலாபத்தில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டது.
2. பொது ஒதுக்கத்தை பயன்படுத்தி 31.03.2017 இல் 10:1 என்ற விகிதத்தில் ஒதுக்கங்களை மூலதனமாக்குவதற்கான பங்கு வழங்கல்
3. பொது ஒதுக்கத்திற்கு ரூ. 20 000 மாற்றுதல் வேண்டும்.
4. சாதாரண பங்குகளிற்கு இடைக்காலப் பங்குலாபங்களாக ரூ. 25 000 வழங்கப்பட்டது.
5. இறுதிப் பங்குலாபமாக சாதாரண பங்குகளுக்கு பங்கொன்று ரூ. 2 பிரேரிக்கப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது** : 2017.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றல் கூற்று

| | சாதாரணப்பங்கு மூலதனம் ரூபா | மீள்மதிப்பீட்டு மிகை ரூபா | பொது ஒதுக்கம் ரூபா | பகிரப்படாத இலாபம் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 01.04.2016 இல் மீதிகள் | 300 000 | 90 000 | 50 000 | 75 000 | 515 000 |
| ஆண்டுக்கான மொத்த முற்றடக்கல் வருமானம் | | 10 000 | | 180 000 | 190 000 |
| ஒதுக்கங்களை மூலதனமாக்கல் | 30 000 | | (30 000) | | - |
| பொது ஒதுக்கம் | | | 20 000 | (20 000) | - |
| 31.03.2017 இல் மீதிகள் | 330 000 | 100 000 | 40 000 | 235 000 | 705 000 |



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பயிற்சி 1

2016 ஏப்ரல் 01 இல் வரையறுத்த சாந்தினி கம்பனியின் உரிமையாண்மையானது வருமாறு:

| | |
|---|---|
| 20 000 சாதாரண பங்குகள் | ரூ. 400 000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | ரூ. 90 000 |
| பகிரப்படாத இலாபம் | ரூ. 35 000 |

மேலதிக தகவல்கள்

1. 31.03.2017 இல் முழுப்பணத்தையும் பெறக்கூடியதாக பங்கொன்று ரூ. 20 விலையில் 1000 சாதாரண பங்குகள் விநியோகிக்கப்பட்ட 1 500 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று பங்குகள் விகிதாசார முறையில் ஒதுக்கப்பட்டு மேலதிக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.
2. காணியின் மீள்மதிப்பீட்டு இலாபம் ரூ. 15 000 ஏற்பட்டது.
3. 31.03.2017 இல் இலாபம் ரூ. 250 000 ஆகும்.
4. செலுத்திய பங்குலாபம் - சாதாரண பங்குகள் ரூ. 30 000
5. பொது ஒதுக்கத்திற்கு ரூ. 20 000 மாற்றுதல்
6. ஒதுக்கத்தினை மூலதனமாக்குதல் ஆனது நிறுத்தி வைத்த வருமானங்களை பங்கொன்று ரூ. 20 படி 5 பங்குகள் வைத்திருப்போருக்கு 1 பங்கு என்ற அடிப்படையில் மார்ச் 2017 இல் வழங்கப்பட்டது.

**வேண்டப்படுவது** : 2017.03.01 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றல் கூற்று

## பயிற்சி 2

01.04.2016 இல் ABC லிமிட்டட்டின் நிதி நிலைக் கூற்றின் சுருக்கம் வருமாறு

| | கிரயம் | | |
|---|---|---|---|
| <u>நடைமுறை அல்லாச் சொத்து</u> | | | |
| காணி கட்டடங்கள் | 400 000 | (180 000) | 220 000 |
| மோட்டார் | 350 000 | (50 000) | 300 000 |
| | 750 000 | 230 000 | 520 000 |
| <u>நடைமுறைச் சொத்து</u> | | | |
| கடன்பட்டோர் | | 60 000 | |
| காசு | | 480 000 | 540 000 |
| | | | 10 60 000 |
| மூலதனமும் ஒதுக்கங்களும் | | | |
| கூறப்பட்ட சாதாரண பங்குமூலதனம் | | 600 000 | |
| (ஒவ்வொன்றும் 100 படி) | | | |
| சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 85 000 | |
| பொது ஒதுக்கம் | | 200 000 | |
| இலாப நட்டக் க/கு மீதி | | 175 000 | 10 60 000 |

தொகுப்பு : திரு.ம.அசோக்குமார் - ஆசிரியர் - கணக்கீடு (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்)
கணினி வடிவமைப்பு : திரு.சி.கிரிசாந்தன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

2016 / 2017 ஆண்டிற்கான மேலதிக தகவல்கள் வருமாறு

1. 31.03.2017 ம் ஆண்டிற்கான மொத்த முற்றுமடக்கிய வருமானம் ரூ. 325 000
2. 01.04.2016 இல் ஒவ்வொன்றும் 100 படி 2000 சாதாரண பங்குகள் வழங்கப்பட்டன.
3. 31.03.2017 அன்று ஒவ்வொன்றும் 100 படி 1000 பங்குகள் பகிரப்படாத இலாபத்திலிருந்து வழங்கப்படுகிறது.
4. பொது ஒதுக்கத்திற்கு 50 000 மாற்றப்படுகிறது.
5. மோட்டார் 31.03.2017 அன்று 320 000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்படுகிறது.
6. சுாதாரண பங்குகளிற்கு வழங்கப்பட்ட இடைக்கால பங்குலாபம் 30 000

**வேண்டப்படுவது** : 31.03.2017 ல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை அசைவுக்கூற்று

## பயிற்சி 3

அருண் Limited இன் 31.03.2017 இல் உள்ளவாறான பரீட்சை மீதி

| | | |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 50 000 | |
| கொள்வனவு | 670 000 | |
| விற்பனை | | 12 00 000 |
| உட்சுமை கூலி | 20 000 | |
| சம்பளம் | 45 000 | |
| பெற்ற வாடகை | | 24 000 |
| மின் கட்டணம் | 15 000 | |
| விளம்பரம் | 25 000 | |
| இயக்குனர் கட்டணம் | 20 000 | |
| கணக்காய்வுக் கட்டணம் | 10 000 | |
| வங்கிக்கடன் வட்டி | 8 000 | |
| கூறப்பட்ட சாதாரண பங்கு கூலதனம் (@ 100 படி) | | 800 000 |
| மீள்மதிப்பீட்டுத் தொகை | | 80 000 |
| பொது ஒதுக்கம் | | 110 000 |
| இலாப நட்டக் க/கு மீதி 01.04.2016 | | 90 000 |
| 10% வங்கிக்கடன் | | 100 000 |
| ஐயக்கடன் ஏற்பாடு | | 8 000 |
| மோட்டார் பெறுமானத் தேய்வு ஏற்பாடு 01.04.2016 இல் | 600 000 | |
| தளபாடம் பெறுமானத் தேய்வு ஏற்பாடு 01.04.2016 இல் | 200 000 | |
| கடன்பட்டோர் | 120 000 | |
| கடன்கொடுத்தோர் | | 50 000 |
| இடைக்கால பங்குலாபம் | | 40 000 |
| காசு மீதி | 10 19 000 | |
| | 28 02 000 | 28 02 000 |



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

1. 31.03.2017 இருப்புக்களின் கிரயம் ரூ. 60 000 இதன் தேறிய நிகர பெறுமதி ரூ. 52 000
2. வரிக்குப் முன் இலாபத்தில் 20% ஆண்டிற்கான வருமான வரியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
3. ஐயக்கடன் ஏற்பாட்டினை கடன்படோரில் 5% ஆகச் சீராக்குக.
4. மோட்டார், தளபாடம் முறையே கிரயத்தில் 10%, 5% தேய்விடுக.
5. 31.03.2017 அன்று மோட்டார் ரூ. 400 000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்படுகிறது.
6. 31.03.2017 இல் இயக்குனர்கள் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.
7. 10 பங்குகளை வைத்திருப்போருக்கு 1 பங்கு என்ற விகிதாசார அடிப்படையில் பொது ஒதுக்கத்தினைப் பயன்படுத்தி சாதாரண பங்குகள் வழங்கப்பட்டது.
8. பொது ஒதுக்கத்திற்கு ரூ. 20 000 மாற்றப்படுகின்றது.

**வேண்டப்படுவது:**

1) இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்று

2) உரிமை அசைவுக் கூற்று

## நிதிநிலைக் கூற்று

குறித்த நிதியாண்டின் இறுதித் தினத்திலுள்ள நிறுவனத்தின் நிதி நிலைமையினை உள்ளடக்கி தயார் செய்கின்ற கூற்று நிதிநிலைமைக்கூற்றாகும்.

இதன் மாதிரி வடிவம் வருமாறு





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

அல்பா கம்பனியின் 31.03.2017 இல் உள்ளவாறான நிதி நிலைக்கூற்று

| விபரம் | குறிப்பு | தொகை ரூபா | தொகை ரூபா |
|---|---|---|---|
| நடைமுறை அல்லாச் சொத்து | | | |
| ஆதனம் பொறி உபகரணம் | 4 | | XX |
| முதலீடுகள் | | | XX |
| நடைமுறைச் சொத்து | | | |
| இறுதி இருப்பு | | XX | |
| வியாபார வருமதியும் ஏனைய வருமதியும் | 5 | XX | |
| முற்பணச் செலவுகள் | | XX | |
| காசும் காசுக்குச் சமனானவையும் | 6 | XX | XXX |
| | | | XXX |
| உரிமையாண்மையும் பொறுப்பும் | | | |
| சாதாரண பங்கு மூலதனம் | | XX | |
| ஒதுக்கங்கள் | | | |
| மீள் மதிப்பீட்டு மிகை | | XX | |
| பொது ஒதுக்கம் | | XX | |
| இலாப நட்டக் க/கு மீதி | | XX | XXX |
| நடைமுறை அல்லாப் பொறுப்பு | | | |
| வங்கிக் கடன் | | XX | |
| குத்தகை கடன் கொடுத்தோர் | | XX | |
| ஈட்டுக் கடன் | | XX | XXX |
| நடைமுறைப் பொறுப்பு | | | |
| வியாபாரக் கடன் கொடுத்தோர் | | XX | |
| குத்தகை கடன் கொடுத்தோர் | | XX | |
| சென்மதி வரி | | XX | XXX |
| | | | XXX |



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

ஆதனம் பொறி உபகரணம் அசைவுக் கூற்று

| | விபரம் | காணி கட்டடம் | மோட்டார் | தளபாடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| a. | கிரயம் | | | | |
| | ஆரம்ப மீதி | XX | XX | XX | XX |
| | கொள்வனவு / சேர்த்தல் | | XX | | XX |
| | அகற்றல் / விற்பனை | | | (XX) | (XX) |
| | மீள் மதிப்பீடு (பெ.தே.ஏற்பாடு) | (XX) | | | (XX) |
| | மீள் மதிப்பீட்டு மிகை | XX | | | XX |
| | | XXX | XXX | XXX | XXX |
| b. | திரண்ட பெறுமானத் தேய்வு | | | | |
| | ஆரம்ப மீதி | XX | XX | XX | XX |
| | ஆண்டிற்கான பெ.தே | XX | XX | XX | XX |
| | அகற்றல் | | | (XX) | (XX) |
| | மீள் மதிப்பீடு | (XX) | | | (XX) |
| | | XX | XX | XX | XX |
| | தேறிய பெறுமதி (a-b) | XX | XX | XX | XXX |

வியாபார வருமதியும் ஏனைய வருமதியும்

| | | |
|---|---|---|
| கடன்பட்டோர் | XXX | |
| ஐயக்கடன் | (XX) | XXX |
| | | XXX |

காசும் காசிற்குச் சமமானவையும்

| | |
|---|---|
| காசு மீதி | XX |
| வங்கி மீதி | XX |
| திறைசேரி | XX |
| | XX |

உதாரணம் :

வரையறுக்கப்பட்ட அருள் லிமிட் இன் நடைமுறை அல்லா சொத்துக்களின் விபரம் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| காணி கட்டடம் (கிரயம்) | 500 000 | | |
| மோட்டார் (கிரயம்) | 300 000 | | |
| தளபாடம் (கிரயம்) | 200 000 | | |
| திரண்ட தேய்மான ஏற்பாடு 01.04.2016 | | கட்டடம் | 180 000 |
| | | மோட்டார் | 110 000 |
| | | தளபாடம் | 30 000 |

மேலதிக தகவல்கள்

1. 01.01.2017 இல் 50 000 கிரயமுடைய தளபாடம் கொள்வனவு செய்யப்பட்டது.
2. 01.10.2016 இல் 100 000 கிரயமுடைய மோட்டார் 70 000 க்கு விற்பனை செய்யப்பட்டது. இது 01.04.2014 இல் கொள்வனவு செய்யப்பட்டது.
3. 200 000 கிரயமடைய காணி 20 000 சுட்டி மதீப்பீடு செய்யப்பட்டது.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

ஆதனம் பொறி உபகரணம் அசைவுக் கூற்று

| விபரம் | காணி கட்டடம் | மோட்டார் | தளபாடம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆரம்ப மீதி | 500 000 | 300 000 | 200 000 | 10 00 000 |
| கொள்வனவு | | | 50 000 | 50 000 |
| மீள் மதிப்பீடு | 20 000 | | | 20 000 |
| அகற்றல் | | (100 000) | | (100 000) |
| | 520 000 | 200 000 | 250 000 | 970 000 |
| திரண்ட பெறுமானத் தேய்வு | | | | |
| ஆரம்ப மீதி | 180 000 | 110 000 | 30 000 | 320 000 |
| மோட்டார் அகற்றல் | | (25 000) | | (25 000) |
| ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு | 30 000 | 25 000 | 21 250 | 76 250 |
| | 210 000 | 110 000 | 51 250 | 371 250 |
| முன் கொண்டு செ.மீதி | 310 000 | 90 000 | 198 750 | 598 750 |

மோட்டார் அகற்றல்

| | | | |
|---|---|---|---|
| மோட்டார் | 100 000 | பெ.தே | 25 000 |
| | | காசு | 70 000 |
| | | இ.ந | 5 000 |
| | 100 000 | | 100 000 |

## பயிற்சி 1

Oxford Ltd இன் 31.03.2017 இல் பரீட்சை மீதி தகவல்கள் வருமாறு

| | (000) | (000) |
|---|---|---|
| காணி கட்டடம் (கிரயம்) | 9 000 | |
| மோட்டார் (கிரயம்) | 6 000 | |
| தளபாடம் (கிரயம்) | 3 000 | |
| பெறுமானத் தேய்வு ஏற்பாடு 01.04.2016 கட்டடம் | | 2 000 |
| மோட்டார் | | 1 500 |
| தளபாடம் | | 800 |

மேலதிக தகவல்கள்

1. சொத்துக்கள் பின்வருமாறு பெறுமானத் தேய்விடப்படும்

கட்டடம் கிரயத்தில் 5% (காணியின் கிரயம் 50 00 000)

மோட்டார் 10%

தளபாடம் 15%

2. 01.01.2014 இல் 10 00 000 வாங்கப்பட்ட மோட்டார் 640 000 ற்கு 01.07.2016 விற்பனை செய்யப்பட்டது.
3. 01.10.2016 இல் 500 000 ற்கு தளபாடம் வாங்கப்பட்டது.
4. 31.03.2017 அன்று காணிகட்டடம் 70 00 000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டது.

**வேண்டப்படுவது:** 31.03.2017 இல் உள்ளவாறான சொத்தசவுக் கூற்றை தயார் செய்க.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk